
# தூதன்

தூதன் - 32 பிப்ரவரி - 2023 தூது - 2

ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். எபேசியர் 5:15, 16




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 05 |
| செயலர் மடல் | 07 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 09 |
| தேவனை மகிமைப்படுத்த | 10 |
| திருச்சபை ஜெபநாள் | 11 |
| வேதவினா போட்டி | 13 |
| தெரிந்துகொள்வோம் | 15 |
| Health Tips | 17 |
| Children's Corner | 20 |
| Birthday Celebrants | 26 |
| Wedding Anniversary | 30 |
| ஆராதனைப் பாடல்கள் | 31 |
| Why Should I Tithe?  Is Tithing Important? | 32 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்கள் அனைவருக்கும்
என் அன்பின் இனிய தபசு கால நல்வாழ்த்துக்கள்
தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**தபசு கால அன்பின் வாழ்த்து செய்தி**

நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக்
காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே
காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி,
உன் முகத்தைக் கழுவு. மத்தேயு 6:17

Careme (கரேம்) என்பது தபசு காலத்தைக் குறிக்கும் லத்தீன் (latin) சொல். "Quadregesima" என்னும் லத்தீன் சொல்லின் மரபில் இருந்து உருவானது. Quadregesima என்பதற்கு நாற்பதாவது என்று அர்த்தமாகும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நாம் கொண்டாடுவதும் நாற்பதாவது நாளில்தான். உயிர்த்தெழுதல் பெருவிழாவிற்கு முன்பு ஜெபத்திலும், உபவாசத்திலும் தரித்திருக்கும் நாற்பது நாட்களுமே தபசு காலம் என்று அழைக்கப்படுகின்றது.

## LENT DAYS

#த + #ப + #சு

த - தன்னைத்தானே
ப - பரிசோதித்து
சு - சுத்திகரித்து (பகுத்தாய்ந்து)

கொள்ளும் காலம் தான் தபசு நாட்கள்
தன்மேல் அறிந்தோ அறியாமலே
படிந்து இருக்கும்
தூ + சு

பரிசுத்தமில்லாத காரியங்கள் தூசி தட்டி புடைத்து மறுரூபமாக்கப்பட்ட கடவுளுக்கு உன்னதமான பரிசுத்தமானதாக #உப்பாக #ஒப்பாக #ஒப்புரவாக மாற்றியமைத்துக் கொள்ளும் காலம்தான் இந்த அற்புதமான தபசு நாட்கள்.

## 1. தபசு காலத்தில் எப்படி வாழவேண்டும்?

தபசு காலம் நம்மை நாமே நிதானித்தறிந்து பாவ அறிக்கை செய்து மனம் திரும்பும் காலமாகும். இந்தக் காலத்தில் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பரிசோதனை செய்து கிறிஸ்துவின் சந்தோஷம் நமக்குள் தங்கி பெற்றுக்கொள்ள நம்மை அழைக்கிறது.

லெந்து நாட்களில் நாம் நான்கு காரியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. ஜெபம்
2. வேதவாசிப்பு
3. உபவாசம்
4. பகிர்ந்தளித்தல் (தர்மம் செய்தல்)

**ஜெபம்:** ஜெபமே கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாக இருக்கின்றது. நாம் தபசு நாட்களில் ஜெபிப்பதற்கு அதிக நேரம் ஒதுக்க, முதலாவது நம்முடைய அனுதின ஜெபத்திற்கான இடத்தையும், நேரத்தையும் நம்முடைய அட்டவணைகளுக்கு இணங்க முன்கூட்டியே குறித்துக் கொள்ள வேண்டும்.

**வேதவாசிப்பு:** விசுவாசிகளின் ஆவிக்குரிய போஜனம் தேவனுடைய வசனமே. தேவனுடைய வசனத்தை வாசிக்கும் போதும், தியானிக்கும் போதும் நம்முடைய ஆத்துமாவையும், ஆவியையும் வளரச் செய்யும். இந்த நாற்பது நாட்கள் உபவாசத்தின்போதும் தேவனோடு செலவிட வேண்டிய நேரத்தை மறக்காமல் முன்குறிப்போம்.

**உபவாசம்:** தேவனுக்காக உண்டாகும் பசியும் தாகமுமே உண்மையான உபவாசத்தின் நோக்கமாக இருக்கவேண்டும். உகந்த உபவாசம், தகுந்த உபவாசம், மிகுந்த உபவாசமாக இருக்கவேண்டும். உணவருந்தாமல் இருந்து சரீரத்தில் பெலவீனமடைவது உபவாசத்தின் நோக்கம் அல்ல. மாறாக சரீரத்தை வசனத்திலும், கர்த்தருடைய பாதத்திலும் பசியும் தாகமும் கொள்ளச் செய்ய பழக்குவிப்பதே உண்மையான உபவாசம்.

**பகிர்ந்தளித்தல்:** நம்முடைய வாழ்வும், நம்முடைய உடைமைகளும் தேவன் நமக்கு அருளிய ஈவுகளே. தபசு நாட்களில் நம்முடைய உடைமைகளை பிறருக்கு உதவும் வண்ணமாக நாம் பங்கிட்டுக் கொடுத்து, நம்மால் இயன்ற உதவியை பிறருக்குச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். அதாவது நம்முடைய பொருட்களையும் நேரத்தையும் திறமைகளையும் நம்மிலும் நலிந்தோருடன் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்.

இந்த விசேஷித்த நாற்பது நாட்களும் ஏழை எளியோருக்கும், தனிமையில் வாழ்வோருக்கும் நம்முடைய தேவைகள் யாருக்கு எந்த விதத்தில் தேவைப்படுமோ, அவர்களுக்கு அதைச்செய்து பிறரைத் தாங்கும்படி நம்மை அழைக்கின்றது.

## 2. மனமாற்றத்திற்கான காலம்:

தபசு காலம் என்பது மனமாற்றத்திற்கான ஒரு காலமாக கருதப்படுகிறது. மனதுக்கு ஏற்ப பாவங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் மனம் திரும்ப வேண்டிய காலம். மனிதனின் சுய ஆய்வுப் பயணத்தின் காலம். கடவுளோடும் சக மனிதர்களோடும் நல்லுறவை ஏற்படுத்த நமக்கு கொடுத்திருக்கிற காலமாக தவக்காலம் உள்ளது. மனம் மற்றும் உடலின் ஆசைகளை கட்டுப்படுத்தி பிறருக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி காணுகின்ற பிறர் அன்பின் காலமாக இருக்க உதவுகிறது. மனதின் தவறான பயணத்தில் இருந்து சரியான பாதைக்கு திரும்புதல். மனதின் குழப்பமான வழியில் இருந்து தெளிவான பாதைக்குத் திரும்புதல். கேடான மற்றும் வீணான சிந்தையில் இருந்து செவ்வையான சிந்தைக்குத் திரும்புதல். அர்த்தமற்ற காரியங்களில் இருந்து நோக்கமற்ற வாழ்வில் இருந்து நிரந்தரம் நோக்கி திரும்புதல். ஜனம் தவறான பாதையில் செல்லும் போதெல்லாம் தமது தீர்க்கர்களை அனுப்பி மனம் திரும்ப குமாரனை அனுப்பி மனம் திரும்பும் அறைகூவல் தருகின்றார்.

1. பாவ உணர்வு
   (Conviction)
2. பாவி என்று ஏற்றுக்கொள்ளுதல்
   (Consenting/accepting sinfulness)
3. பாவ அறிக்கை
   (Confession of sins)
4. பாவ விடுப்பு அர்ப்பணிப்பு
   (Committmen to relive from sin)
5. இயேசு என்னும் இரட்சகர் அவர் தான் சிலுவையில் என் பாவ பரிகாரத்திற்காக பாடுபட்டு இரத்தம் சிந்தி மரித்தார் என்று இருதயத்தில் நாம் விசுவாசிக்க வேண்டும்.

மனமாற்றம் அதாவது புதிய சிருஷ்டி மனம் புதிதாக மாறும் தேவனோடு ஒப்புரவாக மாறுவதின் மூலம் அவரின் பிள்ளைகள் என்கின்ற அந்தஸ்து மற்றும் மனம் மறுரூபமாக ஆவிக்குரிய ஐக்கியத்தில் இணைகின்றோம்.

மனம் திரும்புதலின் அழைப்பு மகிழ்ச்சிக்கானது. யார் ஒருவர் இந்த மனம் திரும்புதலின் அழைப்பைப் பெற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்கிறார்கள். கெட்ட குமாரனின் வாழ்விலும் அவன் மனம் திரும்பிய மகனுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைத்தது. அத்துடன் அவன் தகப்பனும் அதிக மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. ஏசாயா 55:7 துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன், அவர் அவன்மேல் மனதுருகுவார், நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன், அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.

மோசே என்னும் மாமனிதனுடைய மனமாற்றம் இஸ்ரவேல் மக்களின் விடுதலைக்கு காரணமாயிற்று. யோனா என்னும் இறைவாக்கினரின் மனமாற்றத்தால் நினிவே தேசம் காப்பாற்றப்பட்டது.

மனஸ்தாபம் கொள்வோம், மனஸ்தாபம் நம்மை மனந்திரும்புதலுக்கு கொண்டு வரட்டும். மனம் திரும்புதல் நம்மை பாவ மன்னிப்புக்கு அழைத்து வரட்டும். பாவமன்னிப்பு நமக்கு மீட்பைப் பெற்றுத் தரட்டும். இறையாசீர் உங்களை நிரப்பட்டும்.

நாற்பது நாட்கள் வேறுமுறையில் நடக்க செயல்களை மாற்றிக்கொள்ள பரிசுத்தமாக!

நாற்பது நாட்கள் ஒழுங்கு செய்ய கறைகளை நீக்கிப்போட வனாந்திரத்தை கடப்பதற்கு முன்பு செய்ததுபோல சுத்தம் செய்ய!

நாற்பது நாட்கள் தேவனை நோக்கித் திரும்ப அவருடைய வேதத்தை வாசித்து தியானிக்க இயேசுவின் மெல்லிய சத்தத்திற்குச் செவிகொடுக்க!

நாற்பது நாட்கள் ஆவிக்குரிய பெலத்தில் புதுப்பிக்கப்பட பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட கழுகுகள் போல செட்டைகளை அடித்து உயர பறக்க!

நம்மையே ஆண்டவருக்கு ஒப்புக் கொடுப்போம். ஆண்டவர் தபசு நாட்களில் நம்மை வழிநடத்தி நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்கள் திருப்பணியில்,
அருள்திரு. மோ. ஐசக் பெர்னாண்டஸ்.
சபை ஆயர்.

CAMP CHRISTMAS TREE PROGRAMME







# CSI TAMIL PARISH - DUBAI

CAMP CHRISTMAS TREE PROGRAMME









# CSI TAMIL PARISH - DUBAI

CAMP CHRISTMAS TREE PROGRAMME









# CSI TAMIL PARISH - DUBAI

CAMP CHRISTMAS TREE PROGRAMME









# CSI TAMIL PARISH - DUBAI

## CAMP CHRISTMAS TREE PROGRAMME









JUNIOR CHURCH ANNIVERSARY







# CSI TAMIL PARISH - DUBAI

JC ANNIVERSARY



CHRISTMAS TREE - TAMIL CLASS





அன்பிற்கினிய இறை அன்பர்களே,
ஆண்டவரும் இரட்சகருமாகிய இறைமகன் இயேசுகிறிஸ்துவின்
திருப்பெயரில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்"
யோவான் 15:4

புதிய ஆண்டின் இரண்டாவது மாதத்திற்குள்ளாக நுழைந்திருக்கிறோம். புதிய ஆண்டு பிறந்தவுடனே கர்த்தருக்குள்ளாக வாழ்வதற்கு நாம் தீர்மானங்களை எடுத்திருப்போம். ஆனால் அவற்றில் நிலைத்து வாழ்கிறோமா? என்று திறனாய்வு செய்ய அழைக்கப்படுகிறோம். தீர்மானங்கள் செயல்வடிவம் பெற்றால்தான் ஆன்மீக வாழ்வு செழித்தோங்கும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தான் பாடுபடுவதற்கு முன்பாக தன்னுடைய சீஷரிடம், "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்ற அழைப்பை விடுக்கிறார். "மேனா" என்ற கிரேக்க வார்த்தை "நிலைத்திருத்தல்", "தங்கியிருத்தல்" என்ற பொருள்படுகிறது. விசுவாசிகளின் தங்கவேண்டிய கூடாரம் கிறிஸ்து என்பதை உணர அழைக்கப்படுகிறோம். நிலைத்திருத்தலைக் குறித்து யோவான் 15:4-10 வசனங்களில் 10 முறை பார்ப்பதின் மூலமாக அதனுடைய முக்கியத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. நம் ஆண்டவராகிய கிறிஸ்துவில் நிலைத்திருக்க நாம் செயல்படுத்த வேண்டியதை தியானிப்போம்.

### இறைவார்த்தையில் நிலைத்திருங்கள்:

ஆண்டவரோடு நிலைத்திருக்க வேண்டுமென்றால், வார்த்தையாகிய அவரில், அவருடைய வார்த்தையில் வேரூன்றி கட்டப்படவேண்டும். யோவான் 15:7-ல் "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்" என்ற அழைப்பை விடுக்கிறார். நாம் அவரோடு தங்கி, நிலைத்து இருக்கும்போது அவருடைய வார்த்தைகள் நம்மிலே நிலைத்திருக்கும். ஆகவே அன்றாட என் வாழ்வின் செயல்பாடுகளில் கிறிஸ்துவுடன் பயணிக்கவேண்டும். அவருடைய வார்த்தைகள் என் வாழ்வில் வெளிப்படவேண்டும். சங்கீதம் 1-ல் எப்படி அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும் என்பதைப் பார்க்கிலும், நான் வார்த்தையை வாசிக்கலாம், தியானிக்கலாம், போதிக்கலாம். ஆனால் அவருடைய வார்த்தை என்னுடைய வாழ்க்கையில் வெளிப்படுகிறதா என்பதைச் சீர்தூக்கிப் பாக்கவேண்டும். ஒரு கர்த்தருடைய மனிதர் இவ்வாறாக சொல்கிறார், 'The best sermon are lived not preached' ஆகவே வார்த்தை வாழ்வாக வேண்டும்.

### இறை அன்பில் நிலைத்திருங்கள்:

ஆண்டவரில் நிலைத்திருக்க வேண்டுமென்றால், அவருடைய அன்பிலே நிலைத்திருக்க வேண்டும். யோவான் 15:9-ல் "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். பிதாவும் குமாரனும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பைப்போல, 10-ம் வசனத்தில் கற்பனையில் நிலைத்திருத்தலின் மூலமாக அன்பிலே பெருகுகிறதையும் ஆண்டவர் வெளிப்படுத்துகின்றார். 12-ம் வசனத்தில் அதையே மீண்டுமாக, அன்பே கற்பனையாக இருக்கிறது. அதிலே நிலைத்திருங்கள் என வலியுறுத்துகிறார். பவுலடிகளார் எபேசியர் 3:17,18-ல் "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து" அந்த அறிவுக்கெட்டாத அன்பில் நிலைத்திருங்கள் என அழைக்கிறார். இயந்திரமான இந்த உலகில் அன்பு மாய்மாலமுள்ளதாகவே காணப்படுகிறது. ஆகவே அன்பின் இலக்கணமாகிய கிறிஸ்துவில், அவரின் அன்பில், வார்த்தையில் நிலைத்திருக்க அழைக்கப்படுகிறோம்.

### இறை நம்பிக்கையில் நிலைத்திருங்கள்:

ஆண்டவரோடு நிலைத்திருக்க வேண்டுமென்றால், அவரின் மேலுள்ள விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். பவுலடிகளார் 1 கொரிந்தியர் 16:13-ல் விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்திருங்கள் என்று அழைக்கிறார். நம்முடைய வாழ்வில் பாடுகள், சோதனைகள் வழியாக கடந்து வரும்போது சில சமயங்களில் அவிசுவாசம் நம்மை பற்றிக்கொண்டு நிலைகுலைய வைத்துவிடுகிறது. ஆகவேதான் பவுலடிகளார் 2 கொரிந்தியர் 5:6-ல் நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் என்ற சான்றை வெளிப்படுத்துகிறார். ஆகவே அவரோடு அவரின்மேல் உள்ள விசுவாசத்தில் நிலைத்து நடக்க அழைக்கப்படுகிறோம். விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, தான் உலகத்தில் வாழ்ந்த நாட்களில் விசுவாசத்தை ஊக்குவித்து, ஊட்டி நம்மை வழிநடத்துகிறதைப் பார்க்கிறோம். ஆகவே விசுவாசத்தில் நிலைத்திருந்து ஆண்டவர் தரும் அருட்கொடைகளைச் சுதந்தரிப்போம்.

அன்புக்குரியவர்களே, தபசு நாட்களுக்கு ஆயத்தப்படுகிற நாம், கிறிஸ்துவில், அவரின் வார்த்தையில், அன்பில், நம்பிக்கையில் வேரூன்றி கட்டப்பட அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவரின் அருட்பணியில்
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
உதவி போதகர், இராஸ் அல் கைமா.

# செயலர் மடல்

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்,
அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். சங்கீதம் 34:1

கடந்துவந்த பாதைகளை திரும்பிப் பார்க்கும் பொழுதெல்லாம் கர்த்தரைத் துதிக்காமல், புகழ்ந்து மகிமைப்படுத்தாமல், நன்றி என்று கூறாமல், ஆண்டவரே என்று பரம மண்டலத்தை நோக்காமல், மேலானவைகளைக் குறித்து சிந்திக்காமல், முழங்காலில் நின்று ஜெபிக்காமல், முன்னதாக ஆலயம் வந்து கர்த்தரின் பாதபீடத்தில் வந்து அமர்ந்திருந்து, கர்த்தரே தேவன், கர்த்தரே தேவன் என்று உதடுகளால் போற்றாமல் இருக்கவே முடியாது.

ஆண்டவர் வாசமாயிருக்கும் ஆலயம், இராஜாதி ராஜாவின் இல்லம். உள்ளத்தில் ஆண்டவரை நினைத்து, தேவரீர் இம்மட்டும் கரிசனையோடு நடத்தி வந்தீரே என்று அவர் (தேவன்) புகழ் பாடுவோம். ஆண்டவருடைய கிருபைகளை எண்ணி-எண்ணி மகிமைப்படுத்துவோம். அண்ட சராசரங்களை வார்த்தையினாலே ஞானமாய் படைத்த கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்போம். தேவனுடைய சிறப்பான செயல்களைக் குறித்து சிந்திப்போம். கருத்தோடு நம்மைக் கரம்பிடித்து நடத்திய கரங்களின் தழும்புகளையே நோக்குவோம்.

மோசேயின் வேண்டுதலுக்கு கர்த்தர் செவிகொடுத்து செங்கடலுக்கு ஊடாக உலர்ந்த தரையை உருவாக்கி வழிநடத்தியவர் நம் தேவன். கரைபுரண்டு ஓடிய யோர்தானை கால் நனையாமல் நடந்து செல்ல கிருபை செய்தவர் நம் தேவன். நம் வேண்டுதலுக்கும் செவிசாய்த்து நாம் திருச்சபையாக, கிளைச்சபையுமாக இணைந்து கடந்த நாட்களில் இன்பசுற்றுலா சென்றுவர கிருபை புரிந்தாரே, சகல காரியங்களையும் நேர்த்தியாய் நடத்த அனுக்கிரகம் செய்தாரே தேவனுக்கே மகிமை, தேவனுக்கே புகழ், தேவனுக்கே கனம் யாவும் செலுத்துகிறேன். சூழ்நிலையை மாற்ற வல்ல தேவசெயலை மட்டுமே உற்று நோக்குவோம்.

இறைசித்தம், இறைசத்தம் அறிந்து, கேட்டு திருமறை-உயர்மறை வழி நடப்போம். உத்தமமாய் சத்தியபரன் இயேசுவையே நம்பி அவரையே இலக்காக முன்வைத்து நடப்போம். இலட்சியமெல்லாம் இம்மைக்காக அல்ல, மறுமை வாழ்வுக்காக, நித்திய வாழ்வுக்காக, உண்மையும் உத்தமுமாக நடப்போம்.

இம்மாய உலகில், உலகின் ஒளியாய், வழியாய், சத்தியமாய், நித்தியமாய் வாழ வழி அறியாத மக்களை இயேசுவுக்கு நேராய் வழிநடத்தும், தேவ ராஜ்ஜியத்தின் பிள்ளைகளாய் வழிநடத்தும், நம் திருச்சபை தாங்கும் 100 மிஷனெரிமார்களுக்காய், அவர்கள் குடும்பங்களுக்காய், சார்ந்துள்ள மிஷனெரி ஸ்தாபனங்களுக்காய் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிப்போம். வருகிற 12-ம்தேதி ஞாயிறு காலை அதற்கென்று நடைபெறும் மிஷனெரி ஆராதனைக்காய், அதில் கலந்து கொண்டு இறைசெய்தி வழங்க இருக்கும் IEM General Secretaryயும், நமது சபை தாங்கும் மிஷனெரியுமான Rev. Dr. Rajasingh Eliyas அவர்கள் ஊழியங்களுக்காக மற்றும் ஆராதனையின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம். பங்கு பெறுவோம். பங்காளர்கள் என்ற பெருமிதத்துடன் கர்த்தருடைய சேவையில் இணைந்து செயல்படுவோம்.

துபாய் மாதிரி கிராமம்-கொளகூர் மருத்துவமனை பணிகளுக்காக ஜெபிப்போம். அங்கு குடும்பமாக தங்கி மருத்துவப்பணியை தியாகத்தோடு செய்துவரும் Dr. Samuel Delightson மற்றும் அவர்களுடன் மருத்துவப்பணியைச் செய்துவரும் டாக்டரம்மா அவர்களுக்காகவும் ஜெபிப்போம். சுற்றியுள்ள 11 கிராம மக்களும் இயேசுவை அறிந்துகொள்ள, சொந்தமாக ஏற்றுக்கொள்ள தொடர்ந்து ஜெபிப்போம்.

மேலும் சபை தாங்கும் மிஷனெரி சிறுவர்களின், மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களின், காது கேளாத சிறுவர்களின் கல்வி மற்றும் தேவைகளுக்காக சபையாக நாம் செய்துவரும் உதவிகளுக்காக ஜெபிப்போம்.

இங்குள்ள நமது சபை சார்ந்த ஒவ்வொரு ஊழியங்களுக்காக ஜெபிப்போம். குறிப்பாக Junior Church, Youth Fellowship, Cornerstone, Prayer Cell Ministry, Camp Ministry (Al Quoz, DIP, Jebel Ali, Sonapur) மேலும் ஒருசில இடங்களில் நடந்துவரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். மேற்கண்ட ஊழியங்களுக்காக ஜெபிப்பதோடு, Sponsor செய்து உதவிவரும் குடும்பங்களுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

என்றும் மாறாத, எங்கும் நிறைந்திருக்கிற, எப்போதும் நம்மைக் கண்ணோக்கிப் பார்த்து பாதுகாக்கின்ற தேவன் புதிய மாதத்திலும் நம் உள்ளத்திலும், இல்லத்திலும், உத்யோகப் பொறுப்புகள், ஊழியப் பொறுப்புகள் மத்தியிலும் கூடவே இருந்து நடத்துவார். Worship License, Bank Transaction சம்பந்தமான காரியத்திலும் நன்மையாக நடத்துவார். தேவனாலே எல்லாம் ஏற்ற வேளையில் நடக்கும். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

Praise be to God.

Babu Jeyaseelan, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு,
நீதியைச் செய்யுங்கள்; என் இரட்சிப்பு வரவும்,
என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது." ஏசாயா 56:1

அக்கிரம கட்டுகளை
அவிழ்ப்பவரும்
ஆனந்தம்
அளிப்பவரும்
இன்னல்கள்
அறுப்பவரும்
ஈன்று கொடுப்பவரும்
உன்னதமான தேவனே!
ஊமையை
பேசுபவனாகவும்,
நொண்டியை மலை
தாண்டுவனாகவும்,
எவருடைய கிருபை
செய்கிறதோ... அந்த
பரமபிதாவை..
வணங்குவோம்
வாழ்த்துவோம்.
பேராசையால்..
பகுத்தறிவை
இழந்தவர்கள்
நியாயம்
அநியாயம்
பார்ப்பது எப்படி?
நியாய ஒழுக்கம்
கெட்டபிறகு
பாவம்... தானே..
வரும் தானே...
சகோதரரே...
எந்நிலைவரினும்
வல்லோரை
எதிர்கொள்வதாயினும்
எதிர்விளைவு
எதுவாயினும்
நியாயத்தின்
பக்கம் நிற்பதே..
சிறந்த யுக்தி
நிறைந்த
இயேசுவின் பக்தி
உடலினுள் உறையும்
ஆத்துமாவுக்கு.
அநியாயத்திற்கு
ஞானிகள்
மயங்குவதில்லை.
கர்த்தரின்
நீதியை செய்வோமே!
நிலைத்து நிற்போமே!
கர்த்தர்
எல்லோருக்கும்
வெளிப்படையாகப்
புலப்படுவதில்லை.
ஆனால்... உலகம்
மாயையில்
மயக்கம் கொள்கிறது
மானிடரின்
நன்மைக்காக
கர்த்தரின்
இரட்சிப்பு வரவும்
சமதர்ம நீதி
வெளிப்படவும்...
வாக்கு மாறாத
கர்த்தர் மறுபடியும்
பூமியில் வரும்
வருகை சமீபமே!!!
அன்பே...
முழுமுதலே
முடிவிலா இன்பமே
பரம் என்னும்
நிலை எய்த
நித்தமும்
பக்தி எனும்
அமுதூட்டும்
பரம பிதாவே...
கர்த்தரை
நினைக்கும் அடியார்
இன்னல் நீங்குமே
இன்பம் ஈட்டுமே
அன்பாய் உமைத்
தேடி நாடி
வந்தோர்க்கு
அருளாம் ஞான
செந்தேனை
தாரும் தந்தையே
தூய்மை சேர்
ஒழுக்க வாழ்வில்
துலங்கிடும்
ஆத்ம இரட்சகர்
கர்த்தரின் அருள்
கடலினும் பெரிதாமே
வையம் முழுதும்
கர்த்தர் மயம்
ஐயம் வேண்டாம்
மெய்யான விசுவாசியே

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தேவனை மகிமைப்படுத்த

உலகத் துக்கு வெளிச்சம்
நீங்க தாங்க
மலைமேல் கட்டியது நகரம்
மறையா திருக்க

கொளுத்திய விளக்கு ஒளிரும்
தூரம் உயரம்
வெளிச்சம் குளிச்சும் ஒளித்தும்
மிரளும் இருளிம்

விளக்கை ஒழிக்கக் கொளுத்தும்
வழக்கம் இல்லையாம்
வெளிச்சம் பளிச்சிடும் வழியிலே
வைப்பது நோக்கம்

வீட்டு இடுக்கு முடுக்கை
காட்டும் வண்ணம்
தேடிப் பிடித்து விளக்கை
வைப்பதே பயனாம்

மலைமேல் நிலைத்த நகரம்
மறையா திருக்கும்
தலைக்கு மேலே வைத்ததும்
விளக்கும் விளம்பும்

உங்கள் வெளிச்சம் உலகை
உய்யச் செய்யும்
தங்கள் வாழ்வை மக்கள்
கிரியை உயர்த்தும்

காங்கிற மக்கள் தாமும்
சிந்திக்க வேண்டி
நீங்கள் பிரகாசிக்க வேண்டுமாம்
அவர்முன் னாடி

உங்கள் வெளிச்சம் அவர்கள்
மனதைத் தூண்டி
தங்கள் வாழ்வைத் தாங்கள்
உயர்த்த முந்தி

உங்கள் பிதாவால் உங்கள்
வெளிச்சம் காண்பார்கள்
தங்கள் கிரியையால் தாங்கள்
மகிமைப் படுத்துவார்கள்.

ஆதாரங்கள் : மத்தேயு 5:14-16
கவிதை எண் : 256
ஆக்கம் : மணிமுத்து.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

**Master Shane Aaron**
S/o.Mr.Jackson Senabathy Christopher & Mrs.Sharon Sanchana Jackson
02-01-2023

**Master Yosabath**
S/o.Mr.John Singh & Mrs.Elizabeth John Singh
09-01-2023

"நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்." சங்கீதம் 90:14

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- ★ கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- ★ தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- ★ திருச்சபையின் அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார்.
- ★ திருச்சபையின் அனைத்து ஆராதனைகளும், ஊழியங்களும், 29-01-2023 அன்று அனைத்து சபையாருமாக கலந்துகொண்ட இன்ப சுற்றுலாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவிற்காக கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- ★ நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- ★ நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- ★ நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- ★ திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- ★ திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- ★ சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- ★ நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- ★ தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- ★ கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- ★ இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- ★ அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்து மக்களின் சமாதானத்துக்காக,
- ★ உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக,

## நமது ஜெப மன்றாட்டுகள்

- ★ இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக,
- ★ நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- ★ வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- ★ திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக,
- ★ அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- ★ பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- ★ குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- ★ உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- ★ கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும் , உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ★ கர்த்தர்தாமே யாவரையும் எல்லாவிதமான நோய்களுக்கும் விலக்கி தம் செட்டைகளின் மறைவில் பாதுகாத்து நடத்தவும், புதிய வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் யாவருக்கும் நல்ல வேலைவாய்ப்பைத் தந்து நடத்தவும் ஜெபிப்போம்.
- ★ Board Exam எழுத ஆயத்தப்படும் நம் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.
- ★ VBS ஆயத்தப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

“கர்த்தாவே, பரிசுத்தமானது நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது.” சங்கீதம் 93:5b

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(ஏசாயா 51-66)

கீழ்கண்ட வினாக்களுக்கு ஏசாயா 51-66 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. கர்த்தர் யாரைச் சந்திக்கிறார்?
2. கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்.
   கர்த்தர் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார். வசனக்குறிப்பு எழுதுக.
3. என்றென்றைக்கும் நிலைப்பது என்ன?
   தலைமுறை தலைமுறையாய் இருப்பது என்ன?
4. எழும்பி, சீக்கிரத்தில் துளிர்ப்பது என்ன?
   முன்னாலே செல்வதும், பின்னாலே காப்பதும் என்ன?
5. கர்த்தர் யாரை நோக்கிப் பார்க்கிறார்?
6. நாம் நோக்கிப் பார்க்கவேண்டிய இரண்டு குறிப்புகளுக்கான வசனக்குறிப்புகளை எழுதுக.
7. கர்த்தர் எதற்காக ஆச்சரியப்பட்டார்?
8. நம்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்வது என்ன?
9. “கர்த்தருக்கு முன்பாக நிற்பதுபோல”
   வசனக்குறிப்பு எழுதுக.
10. கர்த்தர் எங்கே வாசம் பண்ணுகிறார்?
11. வேத புஸ்தகத்தில் உள்ள வேத புஸ்தகம் எது?

Bro.I.சைமன்,
சபை ஊழியர்.

## ஜனவரி 2023 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. கர்த்தருடைய, வாசியுங்கள், குறையாது, ஜோடில்லாதிராது வாய், ஆவி ஏசாயா 34:16
2. யோவாக் - கணக்கன், எலியாக்கீம் - விசாரிப்புக்காரன் செப்னா - சம்பிரதி. ஏசாயா 36:3
3. பயப்படாதே - 6 முறை. ஏசாயா 41:10,13,14, 43:1,5, 44:2
4. வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார். ஏசாயா 42:21
5. மனுஷனை - உராஞ்சுகிற பட்சியை ஏசாயா 46:11
6. பத்துப்பாகை - ஏசாயா 38:7-8, லட்சத்தெண்பத்தையாயிரம் - ஏசாயா 37:36, புதிய காரியத்தை - ஏசாயா 43:19
7. ஏசாயா 48:18-19
8. மீட்கப்பட்டவர்கள், ஆனந்தக்களிப்புடன், சீயோனுக்கு, நித்திய, தலையின்மேலிருக்கும், மகிழ்ச்சியும், சஞ்சலமும் ஓடிப்போம். ஏசாயா 35:10
9. ஏசாயா 49:16
10. தளர்ந்த கைகளை ஏசாயா 35:3

## ஜனவரி 2023 வேதவினா போட்டி சரியான பதில் எழுதியவர்கள்

1. திருமதி. சாந்தினி ராஜன்
2. திருமதி. அனித்தா ஆல்வின்
3. திருமதி. நிர்மலா பேட்ரிக்
4. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
5. திருமதி. லீதியா ஆல்வின்
6. திருமதி. இனிதா ஜோனா
7. திருமதி. ஷெர்லி சாம்ராபின்
8. திரு. V.மோகன்
9. திருமதி. டயானா ரூபன்
10. திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
11. திருமதி. செலின் அசோக்
12. திருமதி. மெர்லின் விஜில்
13. திருமதி. ரோஸ்லின் ஜெயக்குமார்
14. திருமதி. செல்லா ஆலன்
15. திருமதி. ஷாமினா பென்னி
16. திருமதி. ஜான் பெமி குமாரி டார்வின்
17. திருமதி. ஜெமிமா கிறிஸ்றோபல் அபிலாஸ்
18. திருமதி. ஜெனிஸா சுந்தர்
19. திருமதி. புனிதா தாஸ்

# தெரிந்து கொள்வோம்


## பாடல் பிறந்த வரலாறு
## Rev.சாமுவேல் ஜான் ஸ்டோன்



Rev.சாமுவேல் ஜான் ஸ்டோன் அவர்கள் 1839-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் நாள் இங்கிலாந்து நாட்டில் உள்ள ஸ்டா.ஃ.போர்ட்ஷையரில் பிறந்தார். இவரது தந்தை ஹீப்ரு மொழியில் அறிஞராகவும், மிகச் சிறந்த தாவரவியலாளராகவும் இருந்தார்.

Rev.சாமுவேல் அவர்கள் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து அவர் ஆக்ஸ்போர்டில் உள்ள பெம்ப்ரோக் கல்லூரியில் 1862-ம் ஆண்டு BA பட்டம் பெற்றார். மற்றும் 1872-ம் ஆண்டு MA பட்டம் பெற்றார்.

Rev.சாமுவேல் அவர்கள் பல மதப்போதகர்களின் கிறிஸ்து சபையின் அடிப்படைக் கொள்கைகளைக் குறித்து படித்து வந்தார். அவர்களில் கேப்டவுன் மாகாணத்தின் பிரதம பேராயர் கிரே என்பவரின் பிரசங்கங்களைப் படித்தவர். கிறிஸ்து சபையின் உண்மையான அஸ்திபாரம் என்ன என்பதைக் காட்டும் ஒரு பாடல் எழுத வேண்டும் என்ற ஆவல் உண்டானது. ஆகவே அவர் The Church's one Foundation என்ற ஆங்கில பாடலை எழுதினார். 1890-ம் ஆண்டு முதல் லண்டன் மாநகரில் அல்ஹொலோஸ் திருச்சபையில் தலைமைப் போதகராக ஊழியம் செய்தார். இவர் ஒரு சிறந்த கவிஞர். அநேக பாடல்களையும் எழுதியுள்ளார். 1900-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் நாள் Rev.சாமுவேல் ஜான் ஸ்டோன் அவர்கள் தனது 61-ம் வயதில் காலமானார்.



The Church's one Foundation என்ற ஆங்கில பாமாலையை தமிழில் மொழிபெயர்த்தவர் அயர்லாந்து நாட்டிலிருந்து இந்தியாவிற்கு மிஷனெரி பணி செய்ய வந்த பேராயர் ராபர்ட் கால்டுவெல் ஆவார். பேராயர் கால்டுவெல் அநேக ஆங்கில மற்றும் ஜெர்மனிய பாடல்களை மொழி மாற்றம் செய்தார். அவ்வாறு ஆங்கிலத்தில் இருந்து தமிழாக்கம் செய்த ராபர்ட் கால்டுவெல் அவர்களின்

மகள் மேரி கால்டுவெல் அவர்களால் பாடகருக்குக் கற்பிக்கப்பட்ட பாடலான "சபையின் அஸ்திபாரம் நம் மீட்பர் கிறிஸ்துவே" என்ற பாடல். இந்த பாடல் முதன் முதலில் திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடி தூய திருத்துவ ஆலய பிரதிஷ்டையின்போது பாடப்பட்டது. இன்றும் அனேக திருச்சபைகள் பிரதிஷ்டை செய்யப்படும் போதும், நம்முடைய திருச்சபையிலும் பாடப்பட்டு வருகிறது.



தமிழ்மொழி, "செம்மொழி" என்று முதலில் சொன்ன வெளிநாட்டவர் அறிஞர் பேராயர் ராபர்ட் கால்டுவெல் அவர்கள். இவர் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஊழியம் செய்து அனேக ஆலயங்களையும், பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் உருவாக்கினளார். இவரது சுவிசேஷ பணிகள் மக்களை கிறிஸ்துவின் அன்புக்குள் கொண்டுவந்தது. தமிழ் மொழிக்கான தமிழ் அகராதியை தொகுத்து வழங்கினார். இவரது அரிய பணிகளை நினைவு கூர்ந்து 1968-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு பேராயர் ராபர்ட் கால்டுவெல் அவர்களின் முழு உருவச் சிலையை சென்னைக் கடற்கரையில் அமைத்துள்ளது.

R.ஜெபர்சன்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையின் நீண்டகால அங்கத்தினரும்

நமது சபையின் சிறந்த Bass பாடகருமான

Mr. David Paul அவர்கள் கடந்த 06-01-2023 அன்றும்

நமது சபையின் அங்கத்தினர்

Mr. Wilfred அவர்களின் தகப்பனார்

Mr. Anbaiyan அவர்கள் கடந்த 15-01-2023 அன்றும்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

## DRUG TOXICITY ON LIVER & KIDNEY

### What is Drug?

Drugs are clinical substances that cause changes in an organism's physiology or psychology and used to prevent, diagnosis, treat or relieve the symptoms.

### What is toxicity?

Toxicity is defined as the amount or degree of substance can damage an organism. The substance become toxic at the dose which begins to damage an organism. It may also occur when the persons liver or kidneys are unable to function properly.

### Types of major toxic agents.

Physical- Radiation, Vibration and Electromagnetic field.

Chemical-drugs, pesticides, cyanide base agents and smokes

Biological-Vaccines and biotoxins.

### How Drug affect in liver?

The liver is responsible for the selective update concentration, metabolism and excretion of the majority of drugs. Some parent drugs can directly cause hepatotoxicity, it is generally the metabolites of these compounds that lead to drug-induced liver injury (DILS). Genetic variation in drug metabolism is increasingly being recognized as a factor in the development of DILI.

### There are two types of Liver injury.

Acute Liver Toxicity: Acute liver failure occurs when liver cells are damaged significantly and stops working within a matter of days or weeks.


Chronic liver toxicity: Chronic liver disease is a progressive deterioration of liver function for more than six months which includes synthesis of clotting factors, other proteins, detoxification of harmful products of metabolism and excretion of bile.

## How Drug affect in kidneys?

Chronic drug and alcohol abuse can lead to serve kidney damage or failure. The damage is not always direct, some substances may indirectly cause harm to the kidneys via biologic events. These secondary nephrotoxic effects are often a result of muscle breakdown and extremely high body temperature. some of the OTC medicines like pain killers, antacid, proton pump inhibitors, antibiotics and chronic medicines are affecting the kidney.

## How to prevent liver toxicity?

- Take prescription and nonprescription drugs only when needed and in recommended doses.
- Stop smoking and alcohol drinking
- Avoid risky behavior like body piercing and Tattoos.
- Take care with aerosol sprays.
- Protect the skin from insecticides, fungicides, paint and other toxic chemicals.
- Avoid contact with other people's blood and body fluids.
- Maintain Healthy BMI and keep your food safe.
- Monitoring fat accumulation in the liver and family history of the liver disease.
- Do not share personal items that might have blood on them, such as: Razors, Toothbrushes, Manicuring tools, Pierced earrings
- Get vaccinated against hepatitis B if you are at high risk for contracting h



## How to prevent kidney toxicity?

- Lose weight if you are overweight.
- Take medication as prescribed.
- Physical activity helps to control blood sugar level within the range as much as possible.
- Keep the blood pressure below 140/90
- Maintain the cholesterol range within normal limits.
- Eat food in lower salts and meeting with dietitian to make a kidney healthy eating plan.
- Avoid exposure that can harm the kidneys or cause a sudden drop in kidney function and certain OTC medicines like Ibubrufen, naproxen and antibiotics.
- Eat more Fruit and vegetables like berries, Red Grapes, Cauli flower, Cabbage, Garlic, Egg whites, low fat dairy products and fish. avoid high protein diets.
- Stay Hydrated- The most common reason for the formation of kidney problems is lack of water. Drink plenty of water in a day. Water helps flush out the toxins from your body time to time. So, it is recommended to have at least 8 glasses a day and make your kidneys function properly. However, with established kidney disease your doctor will recommend reduced intake of water. Please follow doctor's instructions
- Vitamins and minerals are powerful antioxidants. Vitamin C helps dissolve kidney stones easily. Foods rich in vitamin C promote better kidney health such as, citrus fruits like orange, cucumbers, broccoli are effective in keeping the kidney healthy.

Have a blessed healthy life.

By Mrs. Rojinin Jeba Kumar

After King Jehu's reign, though there were many power thirsty people lurking, no one was able to usurp the throne from the family of King Jehu, and the throne was peacefully passed to King Jehu's son, Jehoahaz. King Jehoahaz was the 11th king to reign over the northern kingdom of Israel.

*This month kids' corner concentrates on KING JEHOAHAZ 11ᵀᴴ KING OF THE DIVIDED KINDGOM OF ISRAEL (2 KINGS 13:10-14:16). Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*




**LEARN SOMETHING NEW :**



COINS FOUND IN A CAVE IN NORTHERN GALILEE: Two coins bearing the face of Alexander the Great on one side and a bust of Zeus on the other lay hidden behind a rock. The markings on the coins indicated they were minted during the period of Alexander the Great, but the expedition also uncovered silver jewelry including earrings, necklaces, bracelets, and rings in the cave, some dating to much earlier periods.

## GRADE 3 TO GRADE 5 ANSWER THE FOLLOWING:

While King Joash of Judah was in his 23rd year of reign, Jehoahaz the son of Jehu became the king of Israel. He was a king for 17 years in Samaria. Like the other kings of Israel, he was evil and worshipped the golden calves.

God was angry and let the Syrians take them into captivity by King Hazael of Syria. The Syrians burdened the people and King Jehoahaz pleaded with God to help them.

God answered and they escaped the Syrians and went back to their tents. They still did not follow God's laws and worshipped the golden calves.

There were only 50 horsemen, 10 chariots and 10,000-foot soldiers left in his army.

When he died, his son Joash became the king of Israel.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| B | C | H | A | R | I | O | T | S |
| I | G | W | G | N | O | P | K | N |
| T | O | K | Z | L | I | V | E | M |
| R | L | R | F | C | T | E | S | R |
| L | D | G | T | U | T | F | Y | T |
| H | E | X | O | N | C | I | R | E |
| S | N | B | E | P | J | N | I | G |
| Y | C | V | I | Q | T | M | A | N |
| O | E | V | E | K | S | T | F | A |
| S | P | L | E | A | D | E | D | N |

### WORD SEARCH

1) He was king for _________ years.
2) King Jehoahaz _________ with God.
3) There were only Ten _________.
4) King Hazael of _________.
5) He was _________ and worshipped the _________ calves.

**NUMBER GAME :**
**SOLVE THE SUM AND WRITE WHAT DOES IT REPRESENT :**

1) 10 x 2 +10 + 5 + 15 =
2) 40 – 12 – 5 + 2 – 8 =
3) 2000 x 4 + 1000 + 500 + 500 =
4) 3 x 2 + 3 + 1 =
5) 3 x 5 + 10 – 2 =

## GRADE 6 TO 8 AND GRADE 9 AND ABOVE

1) In the 23th year of Joash King of Judah who became king in Israel?




2) ABOUT ME : King Jehoahaz

FATHER:

MOTHER:

GRANDFATHER:

SON:

PROPHET:



3) How does this picture relate to Jehoahaz?
4) The Lord listened to Jehoahaz. Why?
5) What lessons did you learn from Jehoahaz's life:

***Priya Singh***

**(Please send your answer to the pastor by 15th of this month)**

## Answers for the month of January 2023 (KING JOASH - 8TH KING OF THE DIVIDED KINDGOM OF JUDAH (2 KINGS 11TH CHP, 12TH CHP) (2 CHRONICLES 22:10-12, 23TH CHP and 24TH CHP)

### GRADE 3 TO GRADE 5 CHOOSE THE CORRECT ANSWER

1) 7 2) 40 3) Good 4) Temple 5) Chest of box
6) Jehoiada the priest 7) served wooden images and idols

### MATCH THE FOLLOWING

1) Joash was buried not in the tombs of the kings.
2) The money was collected by the king's scribe and high priest.
3) The people went to the temple of Baal and tore it down.
4) Joash is otherwise called as Jehoash.
5) Joash allowed them to stone Jehoiada's son when he tried to remind them of God.
6) The money paid the workers for their labor on the temple.

### GRADE 6 TO 8 AND GRADE 9 AND ABOVE :

1) The money from the trespass offerings and the money from the sin offerings was not brought into the house of the LORD. It belonged to the priests. (2 KINGS 24:14-16)
2) Joash set his heart on repairing the house of the LORD. He gathered the priests and the Levites, and said to them, "Go out to the cities of Judah, and gather from all Israel money to repair the house of your God from year to year, and see that you do it quickly."
   There was not enough money in the royal treasury to underwrite this project. Therefore the king commanded the Levites in Judah's outer cities to collect money and bring it back for the project in Jerusalem. (2 CHRO 24:4-7, 2 KINGS 12:4-5)
3) The temple needed restoration because it was vandalized by Athaliah and her sons. For the sons of Athaliah, that wicked woman, had broken into the house of God, and had also presented all the dedicated things of the house of the LORD to the Baals. (2 CHRO 24:7)
4) They gave the money into the hands of those who did the work, and they paid it out to the carpenters and builders who worked on the house of the LORD, and to masons and stonecutters, and for buying timber and hewn stone, to repair the damage of the house of the LORD. THEY SPEND THE MONEY ON THE WORKERS ONLY!

5) Joash seems to have been a fundamentally weak man. He did good when he was under the influence of the godly Jehoiada, but he did bad when he was under the influence of these leaders of Judah, who led them into idolatry. (2 CHRO 24:17-19)

6) God pronounced judgment through a prophesying priest, Jehoiada's son Zechariah. Zechariah has conveyed the message because you have forsaken the LORD, He also has forsaken you. Because of the message Zechariah conveyed, they conspired against Zechariah. At the command of the king they stoned him with stones in the court of the house of the LORD. Joash the king did not remember the kindness which Jehoiada his father had done to him. He killed his son. (2 CHRO 24:20-22)

7) Zechariah was murdered in the same place where his father Jehoiada had anointed Joash king. (2 CHRO 23:10-11)

8) The army of the Syrians came with a small company of men but the LORD delivered a very great army into their hand, because they had forsaken the LORD God of their fathers. (2 CHRO 24:23-24)

9) They did not bury him in the tombs of the kings. They buried him with his fathers in the City of David. (2 KINGS 12:19-20, 2 CHRO 24:25, 27)

10) Joash  his servants struck him. (2 KINGS 12:19-20, 2 CHRO 24:24-27)

## Last (January) months Childrens Corner prize winner

**Correct answer Participants:**

**GRADE 3 TO GRADE 5** 1) Addi Geoffro 2) Leonel Sam 3) Jeholin Victo 4) Jonathan Solomon 5) Jerwin Jeyakumar 6) Godwin Darwin 7) Steve 8) Adora Binny 9) Rigish Jobin 10) Eric Mic 11) Mark

**GRADE 6 TO GRADE 8** 1) Lenofa Joy 2) Trinita 3) Tiana 4) Jasper Jeyakumar 5) Joanna Solomon 6) Sarah Arul 7) Rithish Joel

**GRADE 9 AND ABOVE** 1) Maisie Fedora 2) Karen Singh 3) Hannah Arul 4) Jerson 5) Sweety 6) Gracelin 7) Jenica 8) Jefflin Victo 9) Jaymie Joseph 10) Jaymen Joseph



## Children’s Corner Gold Cross Winners List 2022

Grade 3 To 5 : MARK
Grade 6 To 8 : TIANA
Grade 9 & Above : MAISIE

## NEW MEMBERS LIST

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Prashanth Raja Lional Dhas | 2949 | Dubai |
| 2 | Mr. Giftlin Shaju J.A | 2950 | Dubai |
| 3 | Mr. Ashok R. | 2951 | Dubai |
| 4 | Mr. Suresh Jebaraj | 2952 | Dubai |
| 5 | Mr. Dhanasingh | 2953 | RAK |
| 6 | Mr. Ranjith T. | 2954 | RAK |
| 7 | Mr. Vijay George | 2955 | Dubai |
| 8 | Mr. Prince Solomon | 2956 | Dubai |
| 9 | Mr. G. Ruban Thiruthuvaraj | 2957 | Dubai |

## திருமறைப் பாட ஒழுங்குகள் - பிப்ரவரி 2023

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05–02–2023 | ஓய்வுநாள் படைப்பின் உயர்நிலை | ஏசாயா 65:17-25 | எபிரெயர் 4:2-13 | மாற்கு 2:23-28 | 8 |
| 12–02–2023 | மிஷனெரி ஆராதனை | யாத்தி. 3:1-12 | அப்போ. 19:1-10 | மத்தேயு 28:18-20 | 71:1-9 |
| 19–02–2023 | தபசு மாற்றுருவாக்கத்தின் காலம் | ஏசாயா 44:21-28 | ரோமர் 11:13-24 | யோவான் 2:1-11 | 6 |
| 26–02–2023 | தூய்மைப் படுத்தும் கிறிஸ்து | சகரியா 13:1-9 | 1 யோவான் 1:5-10 | மாற்கு 1:40-45 | 130 |

# BIRTHDAY CELEBRANTS - FEBRUARY 2023

## DUBAI

01 Miss Joelin Sweety Jefferson

01 Mrs. Anntly Abigail Bini

01 Miss Mirna Angelyn Ravi

02 Mrs. Niffia Janyfel Kim

02 Miss Chrislin Sunil

02 Mr. Jeyasekar Paulian

02 Miss Scarlett Ella Kaki

02 Miss Skylynn Emma Kaki

02 Master Rakshen Immanuel Iliyaraja

03 Mr. Jeyaprakash Kaniraja

03 Miss Samantha Jane Gilbert

03 Master Blessing Benny Hinn Israel

04 Mr. N. Davidson Mony

04 Master Ethan David Sathish Paul

04 Master Shawn Jordan Inbaraj

05 Miss Arun Suvithra

06 Mr. Arthur Arul Daniel

06 Miss Angel Sara Thangamani

06 Mrs. Vijila Nesa Remil Ashok

06 Mr. Pravin Jeno Manonmani

06 Miss Moksha V. Stefanie

07 Mrs. Joice Priya Thilak

07 Mrs. Sheeja Gladson Robinson

07 Dr. Kenneth Singh

07 Mrs. Evangelin Karuna Raslin Jose

07 Miss Katelyn Jolina Steward Jones

07 Mr. Suresh Jebaraj

08 Mr. N. Selvam

08 Miss Jovita Angelin Jesintha David

08 Mr. A. Michael Johnson

09 Mrs. Kanchana Mala Devi Ranjit

09 Mr. P. Ebenezer Raj

09 Miss Nickolyn Nixon

09 Miss Joanna Arlene Christin Solomon

09 Miss Alaina Jenita Vijai Lal

10 Mr. M.D. Manoj Kumar

11 Miss Felicia Joselyn Kingston Jose

11 Miss Ria Joanna Rajkumar Manickam

11 Miss Ance Joyanna Ananda Emmanuel

11 Miss Monica Sharon

12 Mrs. Maniba Babu

12 Mr. R. Jefferson

12 Mr. Albert Vairavanathan

12 Mr. D.Sathish Paul

13 Mr. Anderson Paul Asir Joseph

13 Miss Steffi Sunder Raj

14 Mr. M. Durai Raj

14 Mr. N. Jeba Sobitha Raj

14 Mrs. Beulah Rajamalar Jayasingh

14 Mrs. Merlin Gnana Lincy Ruban Jebadurai

15 Mr. Bevin John Ralsten

15 Mr. J. Albert Samraj

15 Master Jerish Jabaruban

15 Mrs. Sabitha Vinoth Ramaiyan

15 Mrs. Anitta Jeyanthi Aarone

16 Mr. D.M.John Kennady

16 Mrs. Sornavalli Godwin

16 Mrs. Jeraldlin Glenis Sam Kingston

17 Mr. Jacob Samuel J.

17 Mr. Edwin Charles

17 Mr. Kelvin Sampath

17 Mrs. Linda Shiny Pringle

17 Mrs. Sherly Vijay

18 Mrs. Paulin Regina Mary Samuel

18 Miss Dvorah Gem Katie John

18 Mrs. Geetha Baskar

19 Master Jonathan Josiah Christin

19 Mr. Dineshkumar Xavier Dhas

19 Mr. S. Sadheesh Babu

19 Mrs. Emi Sethv Priyadharsini Sam

20 Mrs. Jeba Vinitha Jefferson

20 Mr. Cheeresh Satheesh

20 Master Jacob John Wilson

20 Mrs. Vijila Ramesh Ponraj

20 Mrs. D.Safrina Deva Salben

21 Miss Nishiya Joselin Selin Selva Kumar

21 Mrs. Sharon Christobel Ellwin

21 Master Shawn D Sathya

22 Mrs. Mary Punitha Dhas

22 Mrs. Marthal John

22 Mrs. Jeba Sheeba Jaya Seelan

22 Mrs. Shanu Sam Stalin

22 Mr. Samuel Dilton Sasi

22 Miss Abi Jershna Johnson

23 Mrs. Dorathy Juliet Sujatha Newton

23 Mr. V. Moses

23 Mr. Joel Ravi Samuel

23 Master Alfin Fred

23 Mrs. Sathiya Vinodha Christopher

23 Miss Janessa Ruth Joy Vijayan

23 Master Jaren Joseph Joy Vijayan

23 Master Benaiah Jasiel Binukumar

24 Miss Jane Olive C Jebaraj

24 Miss Grace Jennifer David

25 Mr. Ramesh Peter R.

25 Mrs. Caroline Jenita Kingson

25 Master Beril Doss Anna Suthan

25 Mrs. Jenisha Oshin Madhan Alankar

26 Master. Jethro Adriel Julian

26 Miss Catherine Edwin Rajkumar

26 Miss Daphne Suresh Aabel

26 Master Arshan Bibin

26 Mrs. Genilin Sibi Vetha Raj

26 Master Adam Ryan Abeth

26 Mrs. Dimpi Sheba Vineeth

27 Mrs. Sheela Joylin Raj Kumar

27 Mrs. Priscilla Devamani Karunagaran

27 Mr. Paul Karunagaran

27 Master Efraiyn Rishon Manuel Selva Subin

27 Miss Kalista Rajesh Kadaksham

27 Mrs. Celcia Johnson Durai

28 Mrs. Jenipha Godwin

28 Mr. Johnson Benjamin

28 Mr. P. Naveen John

28 Mrs. Margaret Mary Arul Emrold

28 Master M.V. Jiffith Ramonish Mahiban

## வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால்

ஜனவரி மாதம் 19-ம் தேதி

பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம்

குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

Mrs. Merlin Glory & Mr. P.Stephen Raj

இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

## FUJAIRAH

02 Master Samuel Jeyaseelan Rathnakumar

02 Mr. T. Selvaraja

03 Master Ajin Davidson Kingsley

05 Mrs. Nirmala Rose Joseph

05 Mr. C. Solomon

05 Mr. Merison Arputharaj

05 Miss Shiny David Pon Sekar

06 Mr. Mebin Arputharaj

09 Mr. Eugine Delight Pannir Selvam

17 Mr. Saju Joseph Edwin

18 Mr. K. Shajimon

19 Master Kingsley Anna Durai

23 Mr. R. Anburajakumar

23 Miss Gwen Angelyn Saju

24 Miss Danica Paulin Sam Kingsly

24 Mr. S. Paul Mani

27 Mrs. Merlin Shoba Chella Raja

27 Mrs. Manjula Anna Durai

## RAS AL KHAIMAH

02 Miss Banishia Inbanathan

03 Mr. Suba Boss M.

04 Mr. S. Joel

06 Master Alfin David Ravidas

07 Mrs. Sheeba Jacob Rajkamal

08 Miss. Josie Miracyln Baburaj Singh

09 Master Blessin Durai

09 Mr. Jose M.

10 Mr. P. Samuel Subi

10 Mrs. Selvina Baburaj Singh

11 Master Jeslin Johnson

13 Mr. R. Suresh Rajagopal

17 Mr. S.A. Durai

18 Mrs. Selvi Johnson

18 Master Jitheesh Shalin Prasad

19 Miss Edlyn Thayal Durai Rajan

20 Mr. Bowlin Shibho P.

20 Mr. S. Deva Arul

24 Dr. Ruth Mary Thanammal Gnana Pragash Paul

25 Miss J.R. Adriya Dev Justin Devakumar

27 Master Jerson Immanuel Arul Raj

28 Miss Irine Shobi Anantharaj

29 Miss Suvitsha Deva Arul

# WEDDING ANNIVERSARY CELEBRANTS - FEBRUARY 2023

## DUBAI

02 Mr. & Mrs. Prince Solomon

03 Mr. & Mrs. D. Samson Arputharaj

05 Mr. & Mrs. Christy Chandra Mohan

07 Mr. & Mrs. A. Johnson

07 Mr. & Mrs. Derek Paul Franklin

08 Mr. & Mrs. J. Godwin Dinker

10 Mr. & Mrs. J. James Kumar

11 Mr. & Mrs. Samuel Natarajan

11 Mr. & Mrs. V.C. Suresh

11 Mr. & Mrs. Jeevin Maxwell

12 Mr. & Mrs. R. Inbakumar

14 Mr. & Mrs. John Dennis

14 Mr. & Mrs. J. Augustin Jebadurai

15 Mr. & Mrs. Ashok Raj Kumar S.

16 Mr. & Mrs. Ashok R

18 Mr. & Mrs. N. Davidson Mony

18 Mr. & Mrs. Sam Stalin T

20 Mr. & Mrs. Vijay Kiran

20 Mr. & Mrs. Sunil Soundrapandian

21 Mr. & Mrs. Sathiya Nesan Martin

25 Mr. & Mrs. Jayaseelan Dennis

26 Mr. & Mrs. David Alexander

27 Mr. & Mrs. Lesley Sampath Kumar

27 Mr. & Mrs. Stalin Raja A.S.

## FUJAIRAH

04 Mr. & Mrs. Jaya Christopher

04 Mr. & Mrs. J. Daniel Deva Asirvatham

08 Mr. & Mrs. Navaneetha Kannan

11 Mr. & Mrs. H. Ramesh Kumar

17 Mr. & Mrs. I. David Pon Sekar

## RAS AL KHAIMAH

03 Mr. & Mrs. Joseph Retna Raj. T

04 Mr. & Mrs. A. Robin

07 Mr. & Mrs. Paul Stephen

10 Mr. & Mrs. R. Vijayan

11 Mr. & Mrs. A. Paul Raj

# ஆராதனை பாடல்கள் - பிப்ரவரி 2023

| | | |
|---|---|---|
| ஆரம்ப கவி | : | கூடி மீட்பர் நாமத்தில் இந்த அருள் காலத்தில் |
| **05-02-2023** | | |
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை | 178 | தீராத தாகத்தால் |
| கீர்த்தனை | 5 | இயேசு நாயகனை |
| கீர்த்தனை | 16 | துதி தங்கிய பரமண்டல |
| பாமாலை | 194 | அருள் ஏராளமாய் |
| **12-02-2023** | | |
| பாமாலை | 121 | ஒப்பில்லாத திவ்விய |
| பாமாலை | 176 | சாந்த இயேசு ஸ்வாமி |
| கீர்த்தனை | 98 | மகனே உன் நெஞ்செனக்கு |
| கீர்த்தனை | 131 | இயேசு நேசிக்கிறார் |
| கீர்த்தனை | 129 | அன்பே அன்பே |
| கீர்த்தனை | 31 | சீர் ஏசு நாதனுக்கு |
| **19-02-2023** | | |
| பாமாலை | 137 | எந்தன் ஜீவன் |
| பாமாலை | 44 | இயேசுவே உம்மை தியானித்தால் |
| கீர்த்தனை | 9 | கும்பிடுகிறேன் |
| கீர்த்தனை | 125 | தேவ பிதா என்றன் |
| பாமாலை | 144 | தூய்மை பெற நாடு |
| **22-02-2023** | Ash Wednesday | |
| பாமாலை | 65 | நாற்பது நாள் |
| பாமாலை | 106 | நான் பாவிதான் |
| கீர்த்தனை | 86 | தீய மனதை மாற்ற வாரும் |
| கீர்த்தனை | 110 | பாவியாகவே வாறேன் |
| பாமாலை | 149 | சிலுவை சுமந்தோனாக |
| **26-02-2023** | | |
| பாமாலை | 164 | கர்த்தா நீர் வசிக்கும் |
| பாமாலை | 119 | ரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினைதீர் ஐயா |
| கீர்த்தனை | 148 | பாதம் ஒன்றே வேண்டும் |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தெனை ஆள் |
| பாமாலை | 202 | நான் உம்மைப் பற்றி ரட்சகா |



Mini Bible Character Study Book

# Why Should I Tithe? Is Tithing Important?

PRIYA SINGH

## What is Tithing?

There tend to be some misconceptions about what tithing is. So let's start by clearing those up by looking at the definition of tithing. **In Hebrew, a tithe means 'one-tenth part of something.'**

**Today, however, tithing tends to get swapped with the word offering. Though the two words are very similar, they are not exactly one and the same.** A tithe was used as an offering, but it specifically means one-tenth of something.

## # 1 TITHING IS GIVING TO GOD WHAT BELONGS TO HIM

The first (and in my opinion most important) reason **why we should tithe** is that we'll be giving back to God what belongs to Him.

In these verses from Malachi, God tells His people that they've robbed Him of tithes and offerings.

From the verb 'to rob' it becomes clear that the tithes and offerings belong to God, not us. He even literally declares:

The silver is mine, and the gold is mine. (Haggai 2:8)

A tithe of everything from the land, whether grain from the soil or fruit from the trees, belongs to the Lord; it is holy to the Lord. (Leviticus 27:30)

## # 2 TITHING IS A TEST OF FAITH

Do you truly trust God? Do you trust that He won't leave you high and dry? When you give a tithe, this is a test of your faith in His many promises.

'Honor the Lord with your wealth, with the firstfruits of all your crops; then your barns will be filled to overflowing, and your vats will brim over with new wine. (Proverbs 3:9-10)

## #3 TITHING WILL BRING A BLESSING

Finally, if we do decide to tithe and give back to God what belongs to Him in the first place, He will bless us greatly.

God even says 'Prove me now herewith', meaning that He wants us to try Him and see for ourselves. Once we start tithing, the blessings bestowed upon us will be so great, we'll hardly be able to contain them.

### *What a promise!*

**WHEN WE TITHE, WE ARE SIMPLY GIVING BACK TO GOD A PORTION OF WHAT IS ALREADY HIS!**

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - பிப்ரவரி 2023

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆதி. 33 | மாற்கு 4 | எஸ்தர் 9, 10 | ரோமர் 4 |
| 2 | ஆதி. 34 | மாற்கு 5 | யோபு 1 | ரோமர் 5 |
| 3 | ஆதி. 35,36 | மாற்கு 6 | யோபு 2 | ரோமர் 6 |
| 4 | ஆதி. 37 | மாற்கு 7 | யோபு 3 | ரோமர் 7 |
| 5 | ஆதி. 38 | மாற்கு 8 | யோபு 4 | ரோமர் 8 |
| 6 | ஆதி. 39 | மாற்கு 9 | யோபு 5 | ரோமர் 9 |
| 7 | ஆதி. 40 | மாற்கு 10 | யோபு 6 | ரோமர் 10 |
| 8 | ஆதி. 41 | மாற்கு 11 | யோபு 7 | ரோமர் 11 |
| 9 | ஆதி. 42 | மாற்கு 12 | யோபு 8 | ரோமர் 12 |
| 10 | ஆதி. 43 | மாற்கு 13 | யோபு 9 | ரோமர் 13 |
| 11 | ஆதி. 44 | மாற்கு 14 | யோபு 10 | ரோமர் 14 |
| 12 | ஆதி. 45 | மாற்கு 15 | யோபு 11 | ரோமர் 15 |
| 13 | ஆதி. 46 | மாற்கு 16 | யோபு 12 | ரோமர் 16 |
| 14 | ஆதி. 47 | லூக்கா 1:1-38 | யோபு 13 | 1கொரிந்தியர்1 |
| 15 | ஆதி. 48 | லூக்கா 1:39-80 | யோபு 14 | 1கொரிந்தியர்2 |
| 16 | ஆதி. 49 | லூக்கா 2 | யோபு 15 | 1கொரிந்தியர்3 |
| 17 | ஆதி. 50 | லூக்கா 3 | யோபு 16, 17 | 1கொரிந்தியர்4 |
| 18 | யாத். 1 | லூக்கா 4 | யோபு 18 | 1கொரிந்தியர்5 |
| 19 | யாத். 2 | லூக்கா 5 | யோபு 19 | 1கொரிந்தியர்6 |
| 20 | யாத். 3 | லூக்கா 6 | யோபு 20 | 1கொரிந்தியர்7 |
| 21 | யாத். 4 | லூக்கா 7 | யோபு 21 | 1கொரிந்தியர்8 |
| 22 | யாத். 5 | லூக்கா 8 | யோபு 22 | 1கொரிந்தியர்9 |
| 23 | யாத். 6 | லூக்கா 9 | யோபு 23 | 1கொரிந்தியர்10 |
| 24 | யாத். 7 | லூக்கா 10 | யோபு 24 | 1கொரிந்தியர்11 |
| 25 | யாத். 8 | லூக்கா 11 | யோபு 25, 26 | 1கொரிந்தியர்12 |
| 26 | யாத். 9 | லூக்கா 12 | யோபு 27 | 1கொரிந்தியர்13 |
| 27 | யாத். 10 | லூக்கா 13 | யோபு 28 | 1கொரிந்தியர்14 |
| 28 | யாத். 11,12:1-21 | லூக்கா 14 | யோபு 29 | 1கொரிந்தியர்15 |
| | | | | |
| | | | | |
| | | | | |